கட்டி, பத்திரிகையாளர்களுக்குக் குறைந்த வாடகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகமான வீடுகள் ஒதுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

10-50 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான வாடகை வீடுகளாகயிருந்தால் அங்கேயிருக்கக்கூடிய வீடுகளுடைய எண்ணிக்கை அடிப்படையில் மூன்று சதவீதத்தை நாம் ஒதுக்குகிறோம். அதைப்போல புதிய வீடுகள்—ஃபிளாட்டுகள், மனைகள் அல்லது வீடுகள் என்று கட்டி முடிக்கப்படும்போதும் மூன்று சதவீதம் என்ற அடிப்படையில் நாம் ஒதுக்கீடு செய்கிறோம். ஆகவே புதியதாக வீட்டு வசதிகள் உருவாகும்போது நிச்சயமாக இந்த விகிதாச்சாரத்தில் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கு அரசு தயங்காது.

திருக்கோயில்களில் பணிபுரிகின்ற அலுவலகப் பணியாளர்கள்.

*7084 திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருக்கோயில்களில் பணிபுரிகின்ற அலுவலகப் பணியாளர்கள் தாங்கள் விரும்பினால் இதர கோயில்களுக்கு மாற்றுகின்ற உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அறநிலையத் துறையில் ஏற்கனவேயிருந்த அரசுகள் எல்லாம் பலவிதமான மானியங்களைக் கொடுத்து ஆங்காங்கே திருக்கோயில்களில் பணிபுரியும் அலுவலர்களை வைத்து இருந்தார்கள். பிறகு அவர்கள் அரசு பணியாளர்கள் ஆக்கப்பட்டார்கள். இப்போது பெண்களுக்கும் அரசுப் பணிகளைக் கொடுக்கும்படியான ஒரு காலம் வந்திருக்கும்போது, அவர்களுடைய சம்சாரம் வேறொரு இடத்தில் வேலை பார்க்கிறார்கள் என்றால், அந்த இடத்திற்குப் போகப் பிரியப்படுகிறேன்

1990 ஆகஸ்ட் 20]

என்று ஊழியர்கள் சொல்லும்போது, அந்தக் கட்டத்தில் அந்தப் பணியாளர்களை அந்த இடத்திற்கு மாற்றுவதற்கு அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, திருக்கோவில்களில் சில அரசு ஊழியர்கள் இருக்கிறார்கள். ஆனால், அதிகமாக அந்தந்தப் பகுதிகளிலிருந்து எடுக்கப்பட்ட ஊழியர்கள்தான் திருக்கோவில் ஊழியர்களாக இருக்கிறார்கள். அவர்களை இன்னொரு கோவிலுக்கு மாற்றம் செய்கிறபோது அந்தக் கோவிலில் காலியிடம் இருக்க வேண்டும். ஆனால், அரசு ஊழியர்களைத் தவிர, மற்ற ஏனைய ஆலய ஊழியர்களை நியமனம் செய்கிற அதிகாரம் அந்த தக்காருக்கோ அல்லது அறங்காவலர் குழுவிற்கோ இருக்கிறது. ஆகவே, இன்னொரு இடத்தில் காலியிடம் இல்லாவிட்டால் அங்கே அவர்களை மாற்ற முடியாது. ஆகவே தான் கேள்விக்கு இடமில்லை என்று பதில் சொன்னேன்.

சுற்றுலாத் துறை மூலமாகத் தங்கும் விடுதிகள்

*8055 திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) :

மாண்புமிகு இந்து-சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொல்லிமலையில் அருள்மிகு அரப்பளீஸ்வரர் திருக்கோவில் மற்றும் அங்குள்ள நீர்வீழ்ச்சி ஆகிய இடங்களை பார்ப்பதற்கு சுற்றுலாப் பணிகள் தினமும் வருவதால் சுற்றுலாத் துறை மூலமாக தங்கும் விடுதிகள் கட்ட திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கொல்லிமலை, மாவட்ட சுற்றுலாத் தலமாக தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கு சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக தங்கும் விடுதி கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இம்மாவட்ட சுற்றுலாத்தல மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ. 7 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு தலைவர் அவர்களே, கொல்லி மலையில் அமைந்திருக்கிற அருள்மிகு அரப்பளீஸ்வரர் திருக்கோவிலைப்